TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073075

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் திருவண்ணாமலை    PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவண்ணாமலை    Year: ஆண்டு    FIR No.: மு.த.அ. எண் 04/2019    Date: நாள் 14-02-2019

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by    Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018    Sections பிரிவுகள்: 7
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 01/02/2019 01/02/2019    Date to : நாள் வரை 12-02-2019
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் 11.45 மணி    Time to : நேரம் வரை & 12-02-2019 மாலை 4.15 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14-02-2019    Time : நேரம் காலை 6.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~    எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்    வாதியின் பதிந்த ரவிச்சந்திரன் திருமண மண்டபம், பெரியார் ரோடு செங்கம். சுமார் 35 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் -

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. திலோக்சந்தர்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ரவிச்சந்திரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : நாட்டினம் இந்தியர்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் வழக்கறிஞர்.    (g) Address : முகவரி எண். 22, பெரியார் ரோடு செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1. திரு. சந்திரசேகர், கோட்ட உதவியாளர், (தொழில் நுட்பம்) சுகாதாரத்துறை துணை இயக்குனர் அலுவலகம் திருவண்ணாமலை.
   2. திரு. சேகர், சுகாதார ஆய்வாளர், செங்கம் திருவண்ணாமலை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 14/2/19.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 14/2/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
14/02/2019 - 09.50 மணி

Name: பெயர் V.SARAVANAKUMAR
Rank: நிலை ....DSP........No. எண் ..........
V&AC,
Tiruvannamalai

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

பணிந்து அனுப்பப்படுகிறது:- திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 14.02.2019-ஆம் தேதி காலை 06.30 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது புகார்தாரர் திரு. R.திலோக்சந்துரு, MBA., LLB., த/பெ S.ரவிச்சந்திரன், எண்.22, மெயின் ரோடு, செங்கம், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி தட்டச்சு செய்த புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, விடுநர் R.திலோக்சந்துரு, MBA., LLB., த/பெ S.ரவிச்சந்திரன், எண்.22, மெயின் ரோடு, செங்கம், திருவண்ணாமலை மாவட்டம். பெறுநர் உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம், திருவண்ணாமலை. அய்யா, நான் வழக்கறிஞராக செங்கம் நீதிமன்றத்தில் சுமார் 6 மாதமாக பயிற்சி செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தை உள்ளது. என் தந்தை ரவிச்சந்திரன் கடந்த 2010-ல் ஸ்ரீலதா ரவிச்சந்திரன் திருமண மஹால் என்ற திருமண மண்டபத்தை செங்கம் மெயின் ரோட்டில் கட்டி வாடகைக்கு விட்டு வந்தார். என் தந்தை 2 வருடத்திற்கு முன்பாக நெஞ்சுவலியின் காரணமாக இறந்துவிட்டார். பிறகு மேற்படி மண்டபத்தை நானும் எனது தம்பி பாலசந்துருவும் பார்த்து வருகிறோம். சுமார் 2 மாதத்திற்கு முன்பு செங்கம் வட்டாட்சியரிடம் இருந்து Form-D வாங்க வேண்டும் என்று அறிவுறுத்தி கடிதம் வந்து இருந்தது. படிவம்-D-ல் தீயணைப்புத்துறை சான்றிதழ், சுகாதாரத்துறை சான்றிதழ், கட்டிட உரிமம் மற்றும் வரைபட அனுமதி, பொறியாளர் ABC சான்றிதழ் ஆகியவை வாங்க வேண்டும். இதனால் தீயணைப்புத்துறை சான்றிதழ் ஒரு மாதத்திற்கு முன்பு வாங்கி விட்டேன். சுகாதார சான்றிதழ் வேண்டி மனுவை செங்கம் சுகாதார ஆய்வாளர் திரு.சேகர் அவர்களிடம் 01.02.2019-ஆம் தேதி காலை 10.00 மணிக்கு போன் மூலம் பேசி, அவருக்கு அங்கு அலுவலகம் இல்லாததால் செங்கம் பேருந்து நிலையத்தில் ஒரு பெட்டிக்கடை அருகில் சான்றிதழ் வேண்டி மனு, அதனுடன் தீயணைப்புத்துறை சான்றிதழ், கட்டிட உரிமம் மற்றும் வரைபட அனுமதி, பொறியாளர் ABC சான்றிதழ் (stability Certificate) அரசுக்கட்டணம் ரூ.5,200/- செலுத்தியதற்கான இரசீது, சுகாதார சான்றிதழ் கட்டணம் ரூபாய் 50/- செலுத்தியதற்கான ரசீது மற்றும் புகைப்படம் ஆகியவற்றை இணைத்து அவரிடம் கொடுத்தேன். அன்றே 01.02.2019-ஆம் தேதி பகல் 11.45 மணிக்கு சுகாதார ஆய்வாளர் திரு.சேகர் உடன் திருவண்ணாமலையிலிருந்து சுகாதாரத்துறை துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு.சுந்தரராஜ் அவர்களும் வந்து திருமண மண்டபத்தை பார்வையிட்டார்கள். பின்னர் திருவண்ணாமலை சுகாதாரத்துறை துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு.சுந்தரராஜ் மற்றும் செங்கம் சுகாதார ஆய்வாளர் திரு.சேகர் இருவரும் என்னிடம் சுகாதார சான்றிதழ்

வேண்டுமென்றால் ரூ.10,000/-ம் இலஞ்சமாக தர வேண்டுமென்று கேட்டார்கள். நான் அவர்களிடம் அவ்வளவு பணம் என்னால் தர இயலாது என்று சொன்னேன். அதற்கு அவர்கள் அப்படி என்றால் முடியாது நாங்கள் மேல் அதிகாரிகளுக்கு தர வேண்டும் என்று சொல்லி எழுந்து போய்விட்டார்கள். அன்றே 01.02.2019-ஆம் தேதி திரு.சேகர் அவர்கள் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னுடைய வேலை முடிந்துவிட்டது, உங்களுடைய வேலை சம்மந்தமான கோப்புகளை நேர்முக உதவியாளரிடம் கொடுத்துவிட்டேன். இனிமேல் நீங்கள் அவரிடம் போய் பார்த்துக்கொள்ளுங்கள் என்று கூறினார். கடந்த 09.02.2019-ஆம் தேதி சுகாதார ஆய்வாளர் திரு.சேகர் அவர்கள் என்னிடம் திரும்பவும் போன் செய்து மேல் அதிகாரிகளுக்கு ரூ.5,000/-ம் கொடுக்க வேண்டியுள்ளது, அதனால் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்து சான்றிதழை வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். பின்னர் கடந்த 12.02.2019-ஆம் தேதி பிற்பகல் 3.30 மணியளவில் திருவண்ணாமலையில் காமராஜர் சிலை அருகில் உள்ள அரசு மருத்துவமனை பழைய கட்டிட வளாகத்தில் இயங்கிவரும் சுகாதாரத்துறை துணை இயக்குநர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு.சுந்தரராஜ் அவர்களை சந்திக்க சென்ற போது அவர் அங்கு இல்லை, விசாரித்தபோது அவர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கலந்தாய்வு கூட்டத்திற்காக சென்றிருப்பதாக கூறினார்கள். நான் அன்றே மாலை 4.15 மணியளவில் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் சென்று முதல் மாடியில் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக காத்திருந்த திருவண்ணாமலை சுகாதாரத்துறை துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு.சுந்தரராஜ் அவர்களை சந்தித்து நிலுவையில் உள்ள சுகாதார சான்று சம்மந்தமாக விசாரித்தேன். அவர் தான் வேலை முடித்து தர தனக்கு ரூ.10,000/-ம் கொடுத்தால் தான் உங்கள் கல்யாண மண்டபத்திற்கு வரவேண்டிய சுகாதார சான்றுக்கு பரிந்துரை செய்ய ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் நாங்கள் கஷ்டத்தில் உள்ளோம், பார்த்து செய்யுங்கள் என்று கேட்டதற்கு திருவண்ணாமலை சுகாதாரத்துறை துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு.சுந்தரராஜ் அவர்கள் இலஞ்சப்பணமாக ரூ.6,000/-ஐ தன்னிடமோ அல்லது செங்கம் சுகாதார ஆய்வாளர் திரு.சேகர் அவர்களிடமோ கொடுத்தால்தான் சுகாதார சான்று வழங்க பரிந்துரை செய்வேன் என்று கறாராக சொல்லி அனுப்பிவிட்டார். எனக்கு திருவண்ணாமலை சுகாதாரத்துறை துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு.சுந்தரராஜ் அவர்கள் சுகாதார சான்று வழங்க பரிந்துரை செய்வதற்காக கேட்ட இலஞ்சப்பணம் ரூ.6,000/-யை அவரிடமோ அல்லது செங்கம் சுகாதார ஆய்வாளர் திரு.சேகர் அவர்களிடமோ கொடுக்க விருப்பம் இல்லை. இன்று 14.02.2019-ம்

தேதி காலை 06.30 மணிக்கு திருவண்ணாமலை காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிற்கு வந்து சுகாதார சான்று வழங்க பரிந்துரை செய்வதற்காக பணம் ரூ.6,000/- இலஞ்சமாக கேட்ட திருவண்ணாமலை சுகாதாரத்துறை துணை இயக்குநரின் நேர்முக உதவியாளர் (தொழில்நுட்பம்) திரு.சுந்தரராஜ் அவர்களின் மீது உரிய நடவடிக்கை எடுக்க தட்டச்சு செய்த புகார் மனு மற்றும் அவர் கேட்ட இலஞ்சப்பணம் ரூ.6,000/-த்தை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் அளிக்கிறேன், நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (SD/XXXXX) R.Thilokchandru 14/2/19.

Sir,

Received the complaint on 14.02.2019 at 06.30 hrs and a quick verification on the general reputation of the accused officers was made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 14.02.2019 at 07.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.04/2019, u/s. 7 of Prevention of Corruption Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-xxxxxx) 14/2/19 V.SARAVANAKUMAR, Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Tiruvannamalai.

வி.சரவணகுமார்
14/2/19
(V. SARAVANAKUMAR)
DSP, V&AC,
Tiruvannamalai.